நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /124/2026

வழக்கு சாட்சி : – PW .2 – Additional Witness

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகன்ராஜ் |
| தந்தை பெயர் | : | துரைராஜ் |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 38/ 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **19.06.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் முரளி அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்துக்களை எனக்கு நன்கு தெரியும். கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 12.10.2025 ம் தேதி 11.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்களுடன் பெண் தலைமை காவலர் ராதிகா மற்றும், தலைமை காவலர் 135 முருகதாஸ் என்பவரும் நாகப்பட்டினம் வெளிப்பாளையம், தர்மகோவில் தெரு அருகில் மதுவிலக்கு ரோந்து சென்ற போது சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலித்தீன் பையுடன் வந்த ஒரு நபர், பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி ஒச்சம்மாள் க/பெ. ராசுதேவர், தர்மகோவில் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் என கூறினார். அவரை சோதனை செய்த போது 180 மி.லி பிடிக்கக்கூடிய பிராந்தி பாட்டில்கள் 15 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ,

அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 12.00 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 12.15 மணிக்கு, உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள், தலைமை காவலர் 135 முருகதாஸ் மற்றும் பெண் தலைமை காவலர் ராதிகா ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக 180 மி.லி பிடிக்கக்கூடிய பிராந்தி பாட்டில்கள் 15 எண்ணிக்கையை கைப்பற்றினார்.

பின்னர் அன்றைய தினமே 12.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் பெண் தலைமை காவலர் ராதிகா மற்றும் தலைமை காவலர் 135 முருகதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் தடயத்தை கொட்டி அழித்து அழிப்பு மகஜர் தயார் செய்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே 13.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 842 /2025 U/s 4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை தயார் செய்துள்ளார். பின்னர் எதிரியை நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அதசாஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து கொண்டு U/s. 4(1) (C) TNP Amentment Act 2024 ன் படி குற்ற இறுதி அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /124/2026

வழக்கு சாட்சி : L.W.2 – PW .1

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராதிகா |
| கணவர் பெயர் | : | ஜெகதீஷ் |
| கிராமம் | : | நாகப்பட்டினம் |
| வயது | : | 38/ 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **19.06.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.10.2025 ம் தேதி 11.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்களுடன் நானும், தலைமை காவலர் 135 முருகதாஸ் என்பவரும் நாகப்பட்டினம் வெளிப்பாளையம், தர்மகோவில் தெரு அருகில் மதுவிலக்கு ரோந்து சென்ற போது சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலித்தீன் பையுடன் வந்த ஒரு நபர், பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி ஒச்சம்மாள் க/பெ. ராசுதேவர், தர்மகோவில் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் என கூறினார். அவரை சோதனை செய்த போது 180 மி.லி பிடிக்கக்கூடிய பிராந்தி பாட்டில்கள் 15 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 12.00 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 12.15 மணிக்கு, உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள், தலைமை காவலர் 135 முருகதாஸ் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக 180 மி.லி பிடிக்கக்கூடிய பிராந்தி பாட்டில்கள் 15

எண்ணிக்கையை கைப்பற்றினார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் அன்றைய தினமே 12.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் 135 முருகதாஸ் மற்றும் என் முன்னிலையில் அழிப்பு மகஜர் வாயிலாக கொட்டி அழித்தார், அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த அழிப்பு மகசர் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் அன்றைய தினமே 13.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 842 /2025 U/s 4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.